தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-5-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அதிக வேலைவாய்ப்பை பெற்றுத் தரும் வேளாண் பொறியியல் துறை - வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நான்காவது ஆண்டு பட்டதாரி மாணவர்களின் இரண்டு நாள் கருத்தரங்கம் நேற்று (3-5-2016) பல்கலைக்கழக அண்ணா அரங்கில் இனிதே துவங்கியது.

நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக கோத்ரெஜ் அக்ரோவெட் லிமிடெட் நிறுவனத்தின் பொது மேலாளர் முனைவர். கே. ராமன் மற்றும் இந்திய வேளாண் திறன் மன்றத்தின் மண்டல மேலாளர் முனைவர். ரவிகுமார் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு.ராமசாமி அவர்கள் தனது உரையில் தமிழக விவசாயம் குறித்து மாணவர்கள் தற்கால சூழ்நிலைக்கேற்றாற் போல் தங்கள் திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும். 17ம் நூற்றாண்டில் வேளாண் அறிவியல் குறித்த ஆய்வு தொடங்கப்பட்டது என்றும் விதை, கொள்கை மற்றும் விரிவாக்கம் இம்மூன்றின் காரணமாக விவசாயத்தில் தன்னிறைவு பெற்றுள்ளோம் என்றார். வேளாண் பொறியியல் துறை வருங்காலத்தில் அதிக வேலைவாய்ப்புகள் பெற்றுத்தர காத்திருக்கின்றன என்று கூறினார்.

இந்திய வேளாண் திறன் மன்றத்தின் மண்டல மேலாளர் முனைவர். ரவிக்குமார் அவர்கள் தனது துவக்க உரையில் மாணவர்கள் தனது திறமைகளை வளர்த்து கொள்ளும் விதம் அதற்கான வழிமுறைகள் குறித்து, முன்னோர்களிடமிருந்து நாம் கற்றுக் கொண்ட வாழ்க்கை நெறிமுறைகள் மற்றும் வாழ்க்கை தத்துவங்கள் குறித்தும், தமிழ்மொழியின் மரபியல் குறித்தும் புகைப்படங்கள் வாயிலாக எடுத்துரைத்தார்.

கோத்ரெஜ் அக்ரோவெட் லிமிடெட் பொது மேலாளர் முனைவர் கே.ராமன் அவர்கள் தனது சிறப்புரையில் மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் தனது கல்வியை தொழில்நுட்பங்கள் சார்ந்தவையாக மாற்றி கொள்ள வேண்டும் எனவும், வேளாண் நிறுவனங்களின் தேவைக்கேற்ப தனது கல்வியை தேர்ந்தெடுத்து கல்வி பயில வேண்டும். வருங்காலத்தில் வேளாண்மையின் தேவையும் இதுவே என்றும், மாணவர்கள் தங்களின் தனித்திறமைகளையும், பல்வேறு அயல்நாடு மொழிகளையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் உணர்த்தினார்.

விழாவில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் பயிலும் பல்கலைக்கழக மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

விழாவில் கருத்தரங்கு குறித்த புத்தகத்தை சிறப்பு விருந்தினர் இந்திய வேளாண் திறன் மன்றத்தின் மண்டல மேலாளர் முனைவர். ரவிக்குமார் அவர்கள் வெளியிட கோத்ரெஜ் அக்ரோவெட் லிமிடெட் பொது மேலாளர் முனைவர் கே.ராமன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக, முதன்மையர் (முதுகலை பட்டப்படிப்பு) முனைவர். எஸ். மோகன் அவர்கள் கருத்தரங்கின் முகவுரை ஆற்றினார். கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் சி. மோகன்ராஜ் அவர்கள் வரவேற்புரையும், செல்வி ஸ்ரீதேவி அவர்கள் நன்றியுரையும் வழங்கினார்கள்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்